பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 08 சனிக்கிழமை 25.10.2025 கதிர் 349

## இது ரகசியம் அல்ல!

கனேமுல்லசஞ்சீவவின்கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள இஷாராசெவ்வந்திக்குஉதவினார்கள் என்றபேரில் இதுவரையில் 27 பேரைத் தாம் கைது 2

# இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கு சர்வதேச விசாரணை தேவையற்றது

### ஆளும்தரப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய பிரதமர்

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவதற்கு சர்வதேச விசாரணை அவசியம் இல்லை என்று தேசிய மக்கள் சக்தி அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.



நாடாளுமன்றின் நேற்றைய அமரவில் வாய்மொழி மூல வினாக்களுக்குப் பதில் வழங்கும் போது, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆளும்தரப்பின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசு உடன்படவில்லை என்றும் பிரதமர் கூறியுள்ளார். நாட்டில்மாற்றத்தைஏற்படுத்தும் 2

# யாழ்ப்பாணத்தில் 6 பேர் ஹெரோயினுடன் கைது




யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆறு பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

ஆறுபேரிடமிருந்தும்எழுகிராம்ஹெரோயின் யாழ்ப்பாணம்பொலிஸாரால்கைப்பற்றப்பட்டது.

போதைப்பொருள் தொடர்பில் தீவிர 2

# உள்நாட்டுப் பொறிமுறையை அடியோடு நிராகரிக்கின்றோம்

### பிரதமருக்கு சாணக்கியன் பதிலடி

**நாங்கள் உங்கள் உள்நாட்டு முறைமையை நிராகரிக்கிறோம், மேலும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக நாங்கள் சர்வதேச விசாரணையையே கோருகிறோம், ஏனெனில் இலங்கையின் அரச முறைமைகள் மீதான நம்பிக்கை எங்களுக்கில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.**



**நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் கடந்த நாடாளுமன்ற அமர்வில் ஐ.நா. மனிதஉரிமைகள்பேரவையில்** 2

# துறைமுகங்கள் அமைச்சர் இந்தியா பயணமாகிறார்

துறைமுகங்கள் மற்றும் சிவில் வானூர்தி போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க, இந்திய கடல்சார் வாரம் 2025 நிகழ்வில் பங்கேற்பதற்காக, ஒக்டோபர் 27 திங்கட்கிழமை இரு நாட்கள் அரசுமுறைப் பயண்மாக மும்பை செல்லவுள்ளார்.

இந்தியாவின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு, மும்பை கண்காட்சி மையத்தில் நடைபெறும். இதில் துறைமுக 2

# பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சொத்து விசாரணைப் பிரிவால் கைது

கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சமந்த நாமல் விஜேரத்ன, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுத்த காரணத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமந்த நாமல் 2011 முதல் 2016 வரையான காலப்பகுதியில் கலென்பிந்துனுவெவ பிரதேச சபைத் தலைவராக கடமையாற்றியுள்ளார்.

அக்காலப்பகுதியில்,சொத்துமற்றும்பொறுப்புகள் குறித்துமேற்கொள்ளப்பட்டவிசாரணைக்குஅமைய இலஞ்ச ஆணைக்குழுவின் விசாரணைக்கு வருமாறு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. எனினும், குறித்த அழைப்புக் கடிதத்தின் பேரில் முன்னாள் தவிசாளர் இலஞ்ச ஆணைக்குழு விசாரணைக்கு வராத காரணத்தினால், 2023 ஆம் ஆண்டின் இல. 09 இலஞ்ச ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 126 மற்றும் 127(1)(உ) பிரிவுகளின் கீழ் விசாரணைக்கு ஒத்துழைக்காத குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் தவிசாளர் நேற்றுகஹட்டகஸ்திகிலியநீதிவான்மன்றில் 2

# பாடசாலை நேரத்தை 30 நிமிடங்களால் அதிகரிக்க அதிபர், ஆசிரியர்கள் எதிர்ப்பு

### விடுமுறை விட்டு வகுப்புகள் தொடங்கும்போது போராட்டம்

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் 2026ஆம்ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்துக்கமையபாடசாலைநேரத்தை 30 நிமிடத்தால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வி துறைசார்ந்தவர்களுடன் எந்தவொரு கலந்தாலோசனைகளையும் முன்னெடுக்காமல் எடுக்கப்பட்ட இந்த தீர்மானத்தை தாம் கடுமையாக எதிர்ப்பதாக அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். நவம்பர் 7க்கு முன்னர் பாடசாலை நேரத்தை அதிகரிப்பது குறித்த தீர்மானத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டால் அடுத்த தவணை தொடங்கியதும் ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட அகில இலங்கை ஒன்றிணைந்த ஆசிரியர் 6

# கச்சாயில் கள்ள மணல் ஏற்றிய டிராக்டர் மீது துப்பாக்கிச் சூடு

### சாரதியான 20 வயது இளைஞர் காயம்

யாழ். மாவட்டம், தென்மராட்சி பகுதியின் கச்சாய் துறைமுகத்தையொட்டி பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றிரவு 7:30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

தென்மராட்சிகெற்போலிபகுதியில் சட்டவிரோதமாக அகழ்ந்த மணலை ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை கச்சாய் துறைமுகத்தையொட்டி பொலிஸார் இடைமறித்தனர்.

உழவு இயந்திரம் தப்பியோட முற்பட்டபோது அதன் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதில் உழவு இயந்திரத்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார். 6

# பட்டப்பகலில் இடம்பெறும் கொலைகளை நியாயப்படுத்துவதை ஏற்கவே முடியாது

### தமிழ் அரசுக் கட்சி செயலாளர் சுமந்திரன் காட்டம்

பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள்பாராட்டத்தக்கவைஎன்றாலும், அதனைக் காரணமாகக்கூறி பட்டப்பகலில் இடம்பெறும்கொலைகளைநியாயப்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கும், பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நாடளாவிய ரீதியில் பல்வேறு நடவடிக்கைகளை 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

செய்துள்ளனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் அறிக்கையிட்டது. தெற்கே காலி முதல் வடக்கே யாழ்ப்பாணம் வரையில் இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

செவ்வந்திதலைமறைவாகஓரிடத்திலிருந்து மற்றொருஇடத்திற்கு மாறிமாறிச்செல்வதற்குத் துணைபுரிந்தார்கள்,தங்கஇடம்கொடுத்தார்கள். அவரது போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்கள், அவர் தப்பிச் செல்லப் படகு ஏற்பாடு செய்தார்கள் என்று செவ்வந்தியின் மூச்சுக் காற்றுப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று தெரிகிறது.

இஷாரா செவ்வந்தி, மதுகம வெலி பென்னேயில் இருந்து மித்தேனியவுக்கு தப்பிச் செல்வதற்காக, மதுகம ஷான் என்ற பாதாள உலகக் குழு உறுப்பினர் பணம் செலவழித்தார் என்று சிஜடி நேற்று நீதிமன்றத்தில் அறிக்கையிட்டது.

நீதிமன்றத்தினுள்கனேமுல்லசஞ்சீவவைக் கொலை செய்த பின்னர் செவ்வந்தி எப்படி நீதிமன்றத்திலிருந்து மதுகம வெலி பென்னேக்குத் தப்பிச் சென்றது முதல் அவர் அங்கிருந்து மாத்தறை, மித்தேனிய மற்றும் யாழ்ப்பாணத்திற்கு எப்படியெல்லாம் தப்பிச் சென்றால் இடையில் எங்கெல்லாம் தங்கியிருந்தார் என்பன குறித்த விரிவான அறிக்கையையும் சிஜடியினர் நீதிமன்றத்தில் நேற்று அளித்தனர்.

அரசு ஊழியர்கள், பொலிஸார், பாதாள உலக உறுப்பினர்கள், வர்த்தகர்கள் மற்றும் கொலை சந்தேக நபர்கள் என்று ஏகப்பட்டபேர் செவ்வந்தியின் தலைமறைவுக்கும் தப்பிச் செல்லலுக்கும் உதவினர் என்கிறது சிஜடியின் அறிக்கை. ஆனால், அவர்கள் எல்லோரும் எதற்காக செவ்வந்திக்கு உதவினர் என்பதோ, இந்த உதவி திட்டமிட்ட குற்றக் கும்பலின் திட்டத்தின் ஒரு பகுதியா அல்லது ஏமாற்றப்பட்டு பலரும் உதவ வைக்கப்பட்டனரா என்பது பற்றி அறிக்கையில் விரிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. உதாரணத்திற்கு கிளிநொச்சியில் செவ்வந்திக்கு வீடு வழங்கியவர், தான் ஒரு பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவிக்கே வீடு வழங்கினார் என்று கூறியிருக்கிறாராம். அவரிடமுள்ள அளவுக்கு மீறிய பணம் எப்படி வந்தது என்கிற கேள்வியால் அவர் கூறுவதை நம்புவதற்கு யாரும் இல்லை என்கிறபோதும், செவ்வந்திக்கு உதவியவர்கள் எந்த அடிப்படையில் உதவினர் என்கிற விவரம் எதுவும் சிஜடியின் அறிக்கையில் இடம்பெற்றிருக்கவில்லை.

சிஜடியினரால் அளிக்கை செய்யப்பட்ட அறிக்கையில் கூறப்பட்ட 23 சந்தேகநபர்களும் ஜூம் தொழில்நுட்பம் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர், சமீபத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நான்கு சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். இவர்கள் மட்டுமல்லாமல் செவ்வந்தியின் மூச்சுக் காற்றுப்பட்ட இன்னும் பலரும்கூடக் கைது செய்யப்பட வாய்ப்புள்ளதாக சிஜடியினர் கூறுகின்றனர்.

.................................................

இலங்கை டிஜிட்டல் மயமாக அது தொடர்பான குற்றங்களும் பெருகிவருகின்றன. அதிலும் சமூகஊடகங்கள் மூலமான குற்றங்கள் பெருகி வருகின்றன. இந்தக் குற்றங்கள் விதம் விதமாகப் பெருகின்றன என்பதுதான் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டியது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு இணையக் குற்றம் தொடர்பாக ஒரு பெண்ணைக் கைது செய்திருக்கிறது. அவர் ஒரு பெண்ணின் பெயரில் போலியான முகப்புத்தகக் (பேஸ்புக்) கணக்கை உருவாக்கி அதில் பெண்களின் நிர்வாணப் படங்களை வெளியிட்டு வந்திருக்கிறார். அதுவும் சும்மாயில்லை அந்த நிர்வாணப் பெண்களின் உடல்களில் வேறு உள்ளூர் பெண்களின் தலைகளை மார்பிங் செய்து வெளியிட்டிருக்கின்றாராம்.

கைது செய்யப்பட்ட பெண் கண்டி, எடஹெந்தென்னாவைச் சேர்ந்த 22 வயதுடையவர். சிஜடியின் கண்டி கணினிக் குற்றப்புலனாய்வுப்பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் தொடங்கப்பட்டு கடைசியில் இந்தப் பெண் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இதையெல்லாம் ஆவர் ஏன் செய்தார் எனபது தொடர்பில் இன்னும் சரியாகத் தெரியவரவில்லை. ஆனாலும் வகை வகையாக இத்தகைய குற்றங்கள் இன்னும் பெருகிக்கொண்டேதான் போகப்போகின்றன, அதிலும் எதிர்பாராத வகையில் அவை இடம்பெறப்போகின்றன என்பதற்கான எச்சரிக்கைதான் இந்தச் சம்பவம்.

.................................................

அடுத்த ஆண்டுக்குள் சுமார் 3,000 குறுகிய சேவை பேருந்துகள் சேவையிலிருந்து நிறுத்தப்படும் அபாயம் இருப்பதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்திருக்கிறார். இது அவரது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இருக்கலாம். தொழிற்சங்கவாதிகள் எப்போது ஒன்றை ஒன்பதாகக் கூறுவார்கள் என்பது சரிதான் என்றாலும், அவர் அதற்காகக் கூறும் காரணம் கவனிக்கப்படவேண்டியது.

இலங்கையில் வீதிகளின் அளவுக்கும் தரத்திற்கும் அதில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்பதால் பயண நேரம் அதிகரிப்பதே குறுந்தூர பயணிகள் பேருந்துகள் சேவையிலிருந்து அகல்வதற்கான காரணம் என்று அவர் கூறுகின்றார். அதாவது போக்குவரத்து நெரிசல் அதிகரிப்பதன் காரணமாக குறுந்தூர பேருந்துகள் இனிமேல் சேவையில் ஈடுபட முடியாத நிலமை தோன்றும் என்கிறார்.

மதிப்பீடு இல்லாமல் வாகனங்களை இறக்குமதி செய்வதால் சாலை நெரிசல் மேலும் அதிகரித்துள்ளது என்றும், பேருந்துகளின் எரிபொருள் செலவு அதிகரிப்பு மற்றும் பயணங்களின் எண்ணிக்கை குறைவதால் பேருந்து உரிமையாளர்கள் ஏற்கனவே வெளியேறத் தொடங்கிவிட்டார்கள் என்றும் விஜேரத்ன கூறினார். இதனை அவர் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும்கூடப் பல பேருந்து உரிமையாளர்களும் கூறக் கேட்டிருக்கின்றேன். இந்த நிலமையைச் சமாளிப்பதற்காக யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் பெரும்பாலான மாவட்டங்களில் டீசலுடன் மண்எண்ணெய் கலந்து பேருந்துகளுக்குப் பயன்படுத்துவதும் அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றார்கள். அப்படியில்லை என்றால் இந்தத் தொழில் ஒருபோதும் கட்டுபடியாகாது என்றும் அவர்கள் கூறுகின்றார். வழி மாசைத் தடுக்க அரசு ஒரு நடவடிக்கை எடுத்தால், அதனை உச்சி வருமானத்திற்கு வழி பார்க்க அவர்களும் ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறார்கள், ஆக மொத்தத்தில் வழி மாசு அப்படியேதான் இருக்கிறது.

இந்த நிலமைக்கு ஆளும்தரப்பின் கொள்கையற்ற வாகன இறக்குமதிதான் காரணம் என்று கெமுனு விஜேரத்ன குற்றஞ்சாட்டுகின்றார். தற்போது, ஒருநாளைக்கு சுமார் 1,000 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்படுகின்றன, அதேநேரத்தில் மற்ற வாகனங்களும் எந்த பற்றாக்குறையும் இல்லாமல் பதிவு செய்யப்படுகின்றன, மேலும் முன்பு புறக்கோட்டையிலிருந்து கொட்டாவ வரை ஐந்து பயணங்களை இயக்கிய பேருந்து இப்போது ஒரு நாளைக்கு மூன்று பயணங்களை மட்டுமே இயக்க முடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. மணிக்கு 5 முதல் 6 கிலோமீட்டர் வேகத்தில் இயக்கப்பட்ட பேருந்துகளை இப்போது மணிக்கு 3 கிலோமீட்டர் கூட இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்கிறார் அவர்.

வாகன இறக்குமதி கட்டுப்படுத்தப்படா விட்டால், நடந்து கூட பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும் கெமுனு விஜேரத்ன கூறினார். இந்த கடுமையான போக்குவரத்து நெரிசல் காரணமாக எரிபொருள் விரயம் அதிகரித்து வருவதாகவும், போக்குவரத்து நெரிசலில் எரிவதால் ஆண்டுதோறும் சுமார் 1000 பில்லியன் ரூபாய் எரிபொருள் வீணடிக்கப்படுவதாக ஒரு கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாகவும் அவர் விளக்குகிறார். ஒருபுறம் கிளீன் சிறீலங்கா என்கிறது ஆளும்தரப்பு. மறுபுறத்தில் புகைசிறீலங்காதான் மிஞ்சுகின்றது என்கிறார் கெமுனு. அரசு கவனத்தில் எடுக்குமா இந்தக் கருத்தை என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். வேறென்ன செய்யமுடியும்? .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்நாட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பிரதமர் ஹரினி நேற்றுப் பதிலளித்தார். அந்தப் பதிலில் இலங்கையில் பொறுப்புக்கூறலை நிறைவேற்ற உள்நாட்டு பொறிமுறை மாத்திரமே அனுமதிக்கப்படும், சர்வதேச பொறிமுறைக்கு அனுமதியில்லை, அப்படி சர்வதேச பொறிமுறையை அனுமதித்தால் நாடு பிளவுபடும் எனக் கூறி இருந்தார்.

இது தொடர்பில் பிரதமருக்கு பதில் அளித்த சாணக்கியன் தெரிவித்ததாவது:

பிரதமர் அளித்த பதிலுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆனால், பிரதமரே, உங்களின் ஆட்சிக் காலத்தின் சுமார் 20% ஏற்கனவே முடிந்துவிட்டது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அதாவது, ஒரு வருடம் கடந்துவிட்டது. இப்போது, ஒருவருடம்கடந்தநிலையில், நீங்கள் இந்த சபைக்கு கூறுவது என்னவெனில் அரசு உள்நாட்டு முறைமையைக் கொண்டு செல்ல விரும்புகிறது, சர்வதேச தலையீடுகளுக்கு அனுமதியில்லை என்கிறீர்கள், ஏனெனில் அது சமூகங்களைப் பிளக்கும் என்றும் நாட்டில் மேலும் பிரச்சினைகளை உருவாக்கும் என்றும் கூறுகிறீர்கள்.

அந்த கருத்துடன் நான் ஒப்புக்கொள்வதில்லை. உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் நம்பும், நம்பிக்கையுடன் ஈடுபடும் ஒரு செயல்முறை இருக்கவேண்டும். ஆனால் நீங்கள் அதை நிராகரித்துள்ளீர்கள், மறுத்துள்ளீர்கள். பாதிக்கப்பட்ட சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராக, எனது ஏமாற்றத்தை வெளிப்படுத்துகிறேன். இந்த அரசு குறைந்தபட்சம் பாதிக்கப்பட்ட மக்களின் குரலைக் கேட்டு சர்வதேச விசாரணைக்கு ஒப்புக் கொள்வார்கள் என நாங்கள் நம்பியிருந்தோம்.

எனது நிலைப்பாடு தெளிவாகவே இருக்கிறது, நாங்கள் உங்கள் உள்நாட்டு முறைமையை நிராகரிக்கிறோம், மேலும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக நாங்கள் சர்வதேச விசாரணையையே கோருகிறோம், ஏனெனில் இலங்கையின் அரச முறைமைகள் மீதான நம்பிக்கை எங்களுக்கில்லை. இது போர் முடிந்த 16 ஆண்டுகளாக எங்களின் நிலைப்பாடாகவே உள்ளது.

இப்போது, நீங்கள் குறிப்பிட்ட உள்நாட்டு முறைமைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன், பிரதமரே, உள்நாட்டு முறைமை நீதியாக சமமாக செயல்படும் என்று நீங்கள் எப்படி கூறுகின்றீர்கள்? எப்போது காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் (நுகூஷ்-கூஷ்ஷ்உஎலிகூஷ்னிஷ்விவிஷ்ஜஆஊணளஷே-விலிஜவி) இயங்குவதற்குத் தேவையான பணியாளர் எண்ணிக்கை 250-ஐ கடந்து இருக்க வேண்டும், ஆனால் நீங்கள் ஆட்சிக்கு வந்த ஒரு ஆண்டுக்குப் பிறகும், தற்போதும் 29 பேரே உள்ளனர்? இதுதான் உள்நாட்டுப் பொறிமுறையா?

மாண்புமிகு நீதிமன்ற அமைச்சரே, தயவுசெய்து நான் இவ் எண்ணிக்கையை பிழையாக கூறுகிறேன் என்று சொல்ல வேண்டாம், நீங்கள் உங்கள் அமைச்சகத்தில் சிறிது நேரம் செலவழித்து இந்த எண்ணிக்கைகள் மற்றும் தரவுகளைப் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது, காணாமல்போனவர்களின் அலுவலகத்தில் 59 இடங்களில் 13 பேர் மட்டுமே உள்ளனர். ஒதுக்கப்பட்ட 129 மில்லியனில், ஜூன் 30 ஆம் திகதியளவில் 36 மில்லியன் ரூபாயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரதமரே, நீங்கள் கூறும் இந்த உள்நாட்டு முயற்சிகள் எந்தளவு பயனளிக்கும்? எமக்கான நீதி நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஒரு விஷயம். இலங்கை இழப்பீடு அலுவலகம் (நுகூஷ்கூஷ்ஷ்உள லிகூஷ் யூளஸ்ரீழிஷழிமிஷ்லிஜவி) பற்றியும் கவலை இருக்கிறது. 2009 இல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிகமாக ரூ.200,000 வழங்க ஒப்பந்தம் இருந்தது. ஆனால் 253 குடும்பங்களுக்கு மட்டுமே சுமார் ரூ.60 மில்லியன் வழங்கப்பட்டது.

2022 இல் அமைச்சர் அலி சப்ரி ரூ.100,000 வழங்க முன்வந்தார், அது நிராகரிக்கப்பட்டது. பின்னர் ரூ.200,000 ஆக உயர்த்தினார்கள், அதுவும் நிராகரிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் ரூ.1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டதில் ரூ.800 மில்லியன் மட்டுமே செலவழிக்கப்பட்டது.

2025 பட்ஜெட்டில் மீண்டும் ரூ.1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் இதுவரை ஒரு காசும் வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட தாய்மார்கள் பெரும்பாலும் 2,000 இற்கும் முன்னரே காணாமல் போனவர்களின் தாய்மார்கள். மொத்தம் 16,000 பேரில் சுமார் 7,000-8,000 பேர் அதற்கு முன்னரே பதிவு செய்யப்பட்டவர்கள்.

இப்போது, இலங்கை இழப்பீடு அலுவலகத்தில் நியமிக்கப்படவிருக்கும் இரண்டு உறுப்பினர்களும் இராணுவப் பின்னணியுடையவர்கள் இதனால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் இதனைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். இந்நிலையில், நஷ்டஈடு அலுவலகம் எவ்வாறு நம்பகமாக செயல்படும் என்று நீங்கள் எப்படி கூற முடியும்?

மேலும், அன்றாட பிரச்சினைகள், உதாரணத்திற்கு மட்டக்களப்பு மருத்துவக் கல்லூரி பதாதை சிங்களத்தில் மட்டுமே உள்ளது, தமிழில் இல்லை. இவற்றையும் நான் எழுத்து மூலமாகத் தெரிவிப்பேன். எனது நோக்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதே ஆகும் என தெரிவித்தார்.

## இலங்கையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பிரதமர், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைத் தேசிய நெறிமுறைகளினூடாக உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் என்றும், அந்தச் செயன்முறையானது, உள்ளகச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயங்களின் அடிப்படையிலேயே சர்வதேச விசாரணைகளை அரசு எதிர்ப்பதாகவும் பிரதமர், நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் நம்பகமான உள் நாட்டுப் பொறிமுறையினூடாக, பொறுப் புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரப்படும் நிலையில் யாழ்ப்பாணம் பொலிசாரின் நேற்றைய தீடீர் சோதனையின்போது கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஒரு சந்தேக நபரிடம் இருந்து மூன்று கிராம் ஹெரோயினும் ஐந்து பேரிடம் இருந்து வெவ்வேறாக நான்கு கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பிரதேச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்படுத்தப்பட்டபோது அவரை ஒக்டோபர் 31 வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

## துறைமுகங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கட்டமைப்பு, தளவாடங்கள் மற்றும் நிலையான கடல்சார் வளர்ச்சி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்க உலகளாவிய கடல்சார் தலைவர்கள், தொழில் துறை பிரதிநிதிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஒன்றிணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அமைச்சர் அநுர கருணாதிலக்கதனது பயணத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான துறைமுக மேம்பாடு, கப்பல் போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்திய பிரதி அமைச்சர் சர்பானந்தா சோனோவாலுடன் இருதரப்பு பேச்சு நடத்த அமைச்சர் திட்டமிட்டுள்ளார். அவர் இந்திய கடல்சார் வாரத்தின் அமைச்சரவை அமர்வில் பங்கேற்பதுடன், கடல்சார் மற்றும் தொழில்துறைப் பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார்.

27 முதல் 31 வரை நடைபெறவுள்ள இந்திய கடல்சார் வாரம், சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், துறைமுக நடவடிக்கைகளை நவீனமயமாக்குவதற்கும், கப்பல் போக்குவரத்து மற்றும் தளவாடத்

தொடர்ச்சி 6ம் பக்கம் ....

காலைக்கதிர் Kalaikkathir

# கட்டுநாயக்காக வானூர்தி நிலைய பாதுகாப்பை பலப்படுத்த மதிப்பாய்வு

நாட்டின் வானூர்தி போக்குவரத்தின் பிரதானநுழைவாயிலானபண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தின் பாதுகாப்பை பலப்படுத்துவது தொடர்பானவிடயங்களை மதிப்பாய்வு செய்வதற்காக விசேட கூட்டமொன்று நடைபெற்றுள்ளது. துறைமுகங்கள் மற்றும் வானூர்தி போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித் ருவன் கொடிதுவக்கு மற்றும் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துரயகொந்தா (ஓய்வு) ஆகியோரின் இணைத் தலைமையில் வியாழக்கிழமை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் இந்த உயர்மட்டக்கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதன்போதுஉரையாற்றியபாதுகாப்புச் செயலாளர், பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் உச்சகட்ட பாதுகாப்பைப் நிலைநாட்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். தேசிய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் சர்வதேச இணைப்பில் அதன் முக்கிய பங்கையும் அவர் இதன் போது எடுத்துரைத்துள்ளார். வானூர்தி பயணிகள், வானூர்தி சேவைகளின் பணியாளர்கள், வானூர்தி நிலைய ஊழியர்கள் மற்றும் வானூர்தி நிலைய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைவரினதும் பாதுகாப்பை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பின் மிக உயர்ந்த தரத்தை நிலைநிறுத்துவதற்கு அனைத்து பங்குதாரர்களினால் வழங்கப்படும் அர்ப்பணிப்பையும் அவர் பாராட்டியுள்ளார். சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்தல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் மற்றும் சாத்தியமான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்க ஏற்கனவே உள்ள வழிமுறைகளை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. பங்குதாரர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் மற்றும் அவதானிப்புகளை பகிர்ந்து கொண்டதுடன், தற்போதைய நடைமுறைகளின் செயல்திறனை மேம்படுத்த நடைமுறை தீர்வுகள் தொடர்பிலும் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

அனைத்து தொடர்புடைய நிறுவனங்களின் முயற்சிகளையும் நெறிப்படுத்தவும், நெருக்கமான ஒத்துழைப்பை வளர்க்கவும், வானூர்தி நிலைய பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு சிறந்த மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்கவும் ஒரு விரிவான வழிமுறைகளை நிறுவுதல் தொடர்பில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து பிரதி அமைச்சர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஏனைய உயரதிகாரிகளுடன் வானூர்தி நிலையத்தில் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார்கள். இதன்போது தற்போது அங்கு நடைமுறைப்படுத்தப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

துறைமுகங்கள் மற்றும் வானூர்தி போக்குவரத்து அமைச்சின் செயலாளர், தேசிய புலனாய்வுத் தலைவர், பொலிஸ் மா அதிபர், இலங்கை சுங்க பணிப்பாளர் நாயகம், அரச புலனாய்வு சேவை பணிப்பாளர் நாயகம், இலங்கை வானூர்தி நிலையம் மற்றும் வானூர்தி போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், இலங்கை சிவில் வானூர்தி போக்குவரத்து சபையின் பணிப்பாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், எல்லை இடர் மதிப்பீட்டு நிலையத்தின் பணிப்பாளர், இராணுவ புலனாய்வுத்துறை பணிப்பாளர் நாயகம், வானூர்திபடை புலனாய்வு பணிப்பாளர், மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், கொழும்பு வடக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவு மற்றும் சிறப்புப் பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர்கள், தனிமைப்படுத்தல் சேவைகள் பணிப்பாளர் உட்பட சிரேஷ்ட முப்படைகள், பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட அரசு நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உள்நாட்டு விசாரணை ஒரு கண்துடைப்பு பன்னாட்டு விசாரணைக்கு ஒத்துழையுங்கள்

இலங்கையின் இனப் போரின் இறுதிக்கட்டச் சண்டைகளில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து பக்கச்சார்பற்ற நீதியான சுயாதீனமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதே நீண்டகாலமாக தமிழ் மக்களின் அடிப்படை கோரிக்கையாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கை புதியதல்ல; அது குருதி கலந்த உண்மைகளின் மீதே எழுந்த நீதிக்குரல். ஆனால், அந்தக் குரல் 16 ஆண்டுகளாகத் தொடர்ந்தும் பதிலின்றி, நீதியின்றி, தாமதத்தின் களிமண் குழியில் புதைந்து கிடக்கிறது.

இந்நிலையில் பிரதமர் ஹரினி நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கூற்றில் – 'இனப் போரில் இடம்பெற்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி உள்ளூர் விசாரணை மட்டுமே நடத்தப்படும்; பன்னாட்டு விசாரணைக்கு அவசியம் இல்லை' – என்று தெளிவுபடுத்தியிருப்பது தீவிரமான கவலையை எழுப்புகிறது. இதன் மூலம் தேசிய மக்கள் சக்தி (NPP) தலைமையிலான ஆளும்தரப்பும் முந்தைய அரசுகளின் பாதையையே பின்பற்றுகின்றது என்பது தெளிவாகிறது.

போருக்குப் பிறகு கடந்த 16 ஆண்டுகளாக, பல அரசுகள் 'உள்நாட்டு விசாரணை' என்ற பெயரில் எண்ணற்ற குழுக்களையும் ஆணையங்களையும் நியமித்துள்ளன. ஆனால் அவை அனைத்தும் ஒரே முடிவில் முடிந்தன – அறிக்கைகள் வெளியிடப்படாமலும், குற்றவாளிகள் தண்டிக்கப்படாமலும். சிலவற்றின் பரிந்துரைகள் அரசின் அலமாரிகளில் தூசியாக கிடப்பதாகவுமே அவை முடிந்திருக்கின்றன.. இந்தப் பின்புலத்தில் மீண்டும் 'உள்நாட்டு விசாரணை' என்ற வார்த்தை உச்சரிக்கப்படுவது, தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தும் ஒரு செயல். அதனை அவர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதுவும் போக, அரசுத் தலைவர் தேர்தலை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் வெளிப்படையாகவே 'இலங்கைப் படையினரை தண்டிக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்' என்று கூறியிருக்கும் நிலையில் உள்ளூர் விசாரணையில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்வதற்கு எந்த முகாந்திரமும் உள்ளது. இது நீதி வழங்கும் எண்ணமல்ல, வாக்கு சேகரிக்கும் அரசியல். இதுபோன்ற சூழலில் 'உள்நாட்டு விசாரணை' என்பது உண்மையில் ஒரு கண்துடைப்பு நாடகம் தவிர வேறில்லை.

தமிழ்மக்கள்ஏன்பன்னாட்டுவிசாரணையைவலியுறுத்துகின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை. அந்தக் கோரிக்கையின் வேர்கள் பழிவாங்கும் எண்ணத்தில் அல்ல; நீதி, உண்மை மற்றும் பொறுப்புணர்வில் இருக்கின்றன. உலக நாடுகளின் பங்கின்றி, உள்ளூர் விசாரணைகள் இலங்கையில் ஒருபோதும் சுயாதீனமாய், தைரியமாய் நடந்ததில்லை என்பதற்கு வரலாறே சாட்சி. ஒரு நாட்டின் படையினர் மீதான குற்றச்சாட்டுகளை அதே நாட்டின் அரசே விசாரிக்கும் போது, 'உண்மை வெளிவரும்' என நம்புவது குழந்தைத்தனம்.

மனித உரிமை மீறல்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் இன்னும் தங்கள் பிள்ளைகளின், கணவர்களின், சகோதரர்களின் சுவடுகளைத் தேடி வருகின்றனர். அவர்களுக்கு நீதியோ, ஆறுதலோ கிடைக்கவில்லை. இந்தத் துயரத்தின் மத்தியில் 'உள்நாட்டு விசாரணை போதும்' என்று கூறுவது, அவர்களது கண்ணீரை ஏளனப்படுத்துவது போலாகும்.

இலங்கை உலக சமூகத்தின் உறுப்பினராக தன்னை காண விரும்பினால், அதன் பொறுப்பையும் ஏற்கவேண்டும். மனிதாபிமானச் சட்டங்கள், மனித உரிமை ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டால் மட்டும் போதாது; அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் உறுதியைக் காட்டவேண்டும். இதன் தொடக்கம் பன்னாட்டு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பிலிருந்தே தொடங்குகிறது.

ஆளும்தரப்பு தனது பழைய நியாயங்களையும் அரசியல் பயங்களையும் ஒதுக்கிவைத்து, உண்மையையும் நீதியையும் எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். இல்லையேல், 'நீதி தாமதிக்கப்படுவது என்பது நீதி மறுக்கப்படுவதற்குச் சமம்' என்ற பழமொழி இலங்கையின் வரலாற்றை என்றும் பின் தொடரும்.

பன்னாட்டு விசாரணை என்பது இலங்கைக்கு எதிரானதல்ல; அது உண்மையில் இலங்கைக்கு நன்மை செய்வதற்கான ஒரு வாய்ப்பு. அது துன்புறுத்தப்பட்டவர்களுக்கு நீதியை அளிக்கும்போது, எதிர்கால தலைமுறைகளுக்கு சமாதானம் மற்றும் நம்பிக்கையை உருவாக்கும்.

எனவே, ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசு தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து, பன்னாட்டு விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும். அதுவே இலங்கையின் நீண்டகால அமைதி, ஒற்றுமை மற்றும் உண்மையான நல்லிணக்கத்தின் அடித்தளமாக அமையும்.

# 2026 ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு அரச நிதி பற்றிய குழு அனுமதி

2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கிட்டுச் சட்டமூலத்திற்கு அரச நிதி பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

அரச நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நேற்று வியாழக்கிழமை (23) கூடியபோதே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நிதி அமைச்சின் அதிகாரிகள், 2026ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் ஒவ்வொரு துறைக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் மற்றும் எதிர்கால இலக்குகள் குறித்த விவரங்களை முன்வைத்தனர். இவ்விடயங்கள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டு இதற்கான அனுமதி வழங்கப்பட்டது. 2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு - செலவுத் திட்ட உரை) நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரசுத் தலைவரினால் நவம்பர் 7 நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

# குறைநிரப்புப் பிரேரணை மீதான சட்டச் சிக்கல்கள் எடுத்துரைப்பு

அமைச்சரவை மறுசீரமைப்பை தொடர்ந்து குறைநிரப்பு பிரேரணையை முன்வைக்கும் போது ஏற்படும் சட்ட மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்களை ஆளும்தரப்பிற்கு எடுத்துரைத்தோம். தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்களுக்குத் தீர்வு காண ஒருசில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. சட்ட ரீதியிலான சிக்கல்களுக்கு ஆளும்தரப்பு பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பின்போது 2 அமைச்சுக்களுக்குரிய விடயதானங்கள் மாற்றியமைக்கப்பட்டு, அவை மூன்று அமைச்சுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. குறைநிரப்பு பிரேரணை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் போது 24 அமைச்சுக்கள் காணப்பட்டன. ஆனால் தற்போது 25 அமைச்சுக்கள் உள்ளன.

இவ்வாறான நிலையில் குறைநிரப்பு தொடர்பில் எழும் சிக்கலுக்குப் பொருத்தமான அதிகாரிகளுடன் கலந்துரையாடுவது உகந்ததாக அமையும் என்பதை சபை முதல்வருக்கு அறிவுறுத்தினேன். இந்த விடயம் குறித்து முன்னாள் நிதியமைச்சரான ரவி கருணாநாயக்க மற்றும் அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் தமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டார்கள்.

ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவின் தலைமையில் நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற கூட்டத்தில் நாங்கள் கலந்துக்கொண்டோம். அமைச்சரவை மறுசீரமைப்பை தொடர்ந்து குறைநிரப்பு பிரேரணையை முன்வைக்கும்போது ஏற்படும் சட்ட மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்களை எடுத்துரைத்தோம். தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்களுக்கு தீர்வு காண ஒருசில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. சட்ட ரீதியிலான சிக்கல்களுக்கு ஆளும்தரப்பு பொறுப்புக்கூற வேண்டும் என்றார்.

# ஒரு சட்டச் சிக்கலும் ஏற்படாது ஆளும்தரப்பிலிருந்து விளக்கம்

அமைச்சரவையை மறுசீரமைப்பதால் குறைநிரப்பு பிரேரணையின் மொத்த தொகையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. கடந்த கால எடுத்துக்காட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றலாம். அமைச்சரவை மறுசீரமைப்பினால் குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றுவதில் எவ்வித சட்ட சிக்கலும் ஏற்படாது என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறைநிரப்பு பிரேரணை மற்றும் அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் முன்வைத்த விடயங்கள் குறித்து நிதியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம். நாடாளுமன்றத்தில் குறைநிரப்பு பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சரவை மறுசீரமைக்கப்பட்டால் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

2024 ஆம் ஆண்டு நிதியாண்டுக்கான குறைநிரப்பு பிரேரணை 2023.09.27 ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு, பிரேரணை 2023.10.05 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் 2023.10.23 ஆம் திகதி அப்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை மறுசீரமைத்தார்.

அமைச்சரவையை மறுசீரமைப்பதால் குறைநிரப்பு பிரேரணையின் மொத்த தொகையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. கடந்த கால எடுத்துக்காட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றலாம். அமைச்சரவை மறுசீரமைப்பினால் குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றுவதில் எவ்வித சட்ட சிக்கலும் ஏற்படாது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# என்னைக் கொல்லச் சதியா? பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஜகத் விதாரண கோரிக்கை

என்னை சுட்டு படுகொலை செய்வதற்கு ஒரு தரப்பினர் முயற்சிப்பதாக கிடைத்துள்ள புலனாய்வு தகவலை பொலிஸ்மா அதிபர் களுத்துறை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார். தாமதிக்காதீர்கள் எனது பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதாரன சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீட்டில் இருந்து வெளியேறும்போது என்னைச் சுட்டுக்கொல்வதற்கு ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர் என்று புலனாய்வுத் தகவல் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டு பொலிஸ்மா அதிபர் களுத்துறை பிரதி பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஊடாக அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

என்னைப் படுகொலை செய்ய முயற்சிக்கும் நபரின் பெயரையும் பொலிஸ்மா அதிபர் குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே தாமதிக்காமல் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். பொலிஸ் மா அதிபர் களுத்துறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தை சபைக்குச் சமர்ப்பிக்கிறேன். எனது பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தாமதிக்காதீர்கள் என்றார்.

# 2026 கல்விச் சீர்திருத்தத்திற்கான வழிகாட்டல் தொகுப்பு வெளியீடு

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் 2026 முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 1 மற்றும் தரம் 6 பாடத்திட்டச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல் தொகுப்பு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்புதிய சீர்திருத்தங்களின் கீழ் ஆரம்பக் கல்வி மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதாவது, தரம் 1, 2 முதலாம் பிரதான கட்டம், தரம் 3, 4 இரண்டாம் பிரதான கட்டம் மற்றும் தரம் 5 மூன்றாம் பிரதான கட்டம் என பிரிக்கப்பட்டுள்ளது.

தரம் 1 முதல் 5 வரையான பாடத்திட்டம் தாய்மொழி, ஆங்கில மொழி, இரண்டாம் தேசிய மொழி, கணிதம், சமயமும் விழுமியக் கல்வியும், ஆரம்ப விஞ்ஞானம் மற்றும் சூழல் சார்ந்த நடவடிக்கைகள், ஒருங்கிணைந்த அழகியற் கல்வி, சுகாதாரமும் உடற் கல்வியும் மற்றும் பாட இணைச் செயற்பாடுகள் ஆகிய 9 பொது கற்றல் துறைகளின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பிரிவில் தரம் 1, 2, 3 மற்றும் 4 இற்கான பாடசாலை நேரங்களில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், தரம் 5 இற்கான பாடசாலை நேரம் மு.ப. 7.30 முதல் பி.ப. 2.00 வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தரம் 1 மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக, புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக தேசிய கல்வி நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட செயற்பாட்டு புத்தகங்கள் வழங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இளையோர் இடைநிலைக் கல்வி தரம் 6 முதல் 9 வரை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அடுத்த ஆண்டு முதல் தரம் 6 இற்காகப் புதிய பாடத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வழிகாட்டல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தரங்களில் உள்ள அனைத்து மாணவர்களும் 14 கட்டாயப் பாடங்களைக் கற்க வேண்டும். அத்துடன், விளையாட்டுக்கள் மற்றும் சங்கங்களில் பங்கேற்கவும் ஒவ்வொரு குழந்தைக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

14 கட்டாயப் பாடங்களும் தொகுதி முறைமை (ளிலி-ற்யிள றீதீவிமிளது) மூலம் கற்பிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது. பாடங்களுக்கு ஏற்ப, ஒரு தவணையில் கற்க வேண்டிய தொகுதிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படவுள்ளது. தரம் 6 முதல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், வாழ்க்கைக்கான தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவு மற்றும் நிதிசார் கல்வியறிவு ஆகிய மூன்று புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதேவேளை, 2027 ஆம் ஆண்டு முதல் முன்பள்ளிகளுக்காக ஒரே பாடத்திட்டக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஆரம்பகால பிள்ளைப் பருவத்துக்கான பாடத்திட்டக் கட்டமைப்பு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் 19,000 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியாளர்களின் பயிற்சித் திட்டம் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இதன்போது, எந்தவொரு பாடசாலையும் மூடப்படாது என்றும், பாடசாலைகளை ஒன்றிணைத்து அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் கொள்கை என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

## துறைமுகங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைகளில் உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும் ஒரு முக்கிய தளமாகச் செயல்படும் என்று கொழும்பிலுள்ள இந்திய உயராணையரகம் தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் அமைச்சர் அநுர கருணாதிலக்கவின் பங்கேற்பானது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஆழமான பொருளாதாரப் பங்காளித்துவத்தையும், வர்த்தகம், தளவாடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அவற்றின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டுகிறது என்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது.

## பட்டப்பகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்துவருகின்றது. அதன்படி பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப்படுகின்றனர். அதேவேளை, மறுபுறம் பாதாள உலகக்குழுவினர் என அடையாளப்படுத்தப்படும் பலர் பொதுவெளியில்கொல்லப்படும்சம்பவங்களும் அதிகரித்துவருகின்றன.

அதுமாத்திரமன்றி ஆளும்தரப்பு பொதுவெளியில் நிகழும் இவ்வாறான படுகொலைகளை பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் கொல்லப்படுவதாகக்கூறி நியாயப்படுத்திவரும்போக்குதொடர்பில்பலரும் கண்டனங்களைவெளிப்படுத்திவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுபற்றிக் கருத்துரைத்த சுமந்திரன், பாதாள உலக்குழுக்கள் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பினால்முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைத் தாம் வரவேற்பதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும்அதனைக்காரணமாகக்கூறி பொதுவெளியில் இடம்பெறும் கொலைகளை நியாயப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு முற்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும், மாறாக சட்டம்,ஒழுங்கைஉரியவாறுபேணவேண்டிய கடப்பாடு ஆளும்தரப்புக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவ்வருடத்தில் இதுவரை சுமார் 50 க்கும் மேற்பட்ட இவ்வாறான கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும், இனிவருங்காலங்களில் இத்தகைய சட்டவிரோத படுகொலைகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சுமந்திரன் வலியுறுத்தினார்.

## கச்சாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 20 வயதான மாணிக்கவாசகர் மதுசன் என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் தலைவர் யல்வல பக்ஞ்ஞாசேகர தேரர் தெரிவித்ததாவது:

அதிபர், ஆசிரியர் உட்பட கல்வித் துறைசார்ந்தவர்களுடன் எவ்வித கலந்துரையாடல்களையும்முன்னெடுக்காமல் ஆளும்தரப்பு தன்னிச்சையாக இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. தற்போது 1 - 1.30 மணியளவிலேயே மாணவர்கள் சோர்வடைகின்றனர். அதிகாலை 3 மணிக்கு எழுந்து பல கிலோ மீற்றர் பயணம் செய்து பாடசாலைக்கு வரும் மாணவர்களும் இருக்கின்றனர். அவ்வாறெனில், அருகிலுள்ள பாடசாலைசிறந்தபாடசாலைதிட்டத்துக்கமைய அருகிலுள்ளபாடசாலையில்கல்விகற்பதற்கான வசதிகளையாவது ஆளும்தரப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இவ்வாறு எந்தவொரு முன்னாயத்தமும் திட்டமிடலும் இன்றிப் பாடசாலை நேரத்தில் 30 நிமிடத்தை அதிகரித்துள்ளமை நியாயமற்றது. எனவே இந்தத் தீர்மானத்தை ஆளும்தரப்பு உடனடியாகக் கைவிடவேண்டும். பொருத்தமான மாற்றங்கள் தொடர்பில் துறைசார் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடித் தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்ஜோசப்ஸ்டாலின்தெரிவித்ததாவது:

அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த புதிய முறைமையில் இடைவேளை இரு சந்தர்ப்பங்களில் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.இவ்வாறுஇருஇடைவேளைகள் வழங்கப்பட்டால் மாணவர்களை வகுப்பறைகளிலிருந்துவெளியனுப்புவதற்கும், மீள அழைப்பதற்குமே நேரம் போதாது. அவ்வாறிருக்கையில் இவ்வாறான ஒரு நடைமுறை சாத்தியமற்ற முறைமையை யோசனையை வழங்கியது யார்?

தேசிய கல்வி நிறுவனத்தின் எவ்வித தகுதியும் அற்ற குழுக்களாலேயே இந்தத் திட்டம்முன்வைக்கப்பட்டுள்ளது.கலைத்துறைப் பட்டதாரிகள் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான பாடப்பரப்புக்களை தயாரிக்கின்றனர். இவர்கள் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் குழுக்களில் அங்கத்துவம் வகித்தவர்களாவர். அதனால் அவர்களுக்கு இவ்வாறான முக்கிய பொறுப்புக்கள்வழங்கப்பட்டுள்ளன. நவம்பர் 7 பாடசாலைகளுக்குதவணைவிடுமுறைவழங்க முன்னர் இந்த தீர்மானத்தை ஆளும்தரப்பு மாற்ற வேண்டும். அவ்வாறில்லை எனில் பாடசாலை தொடங்கிய பின்னர் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்போம் என்றார்.

# சமூக ஊடகச் செய்திகள் குறித்து பொலிஸ் தரப்பிலிருந்து விளக்கம்

கதிர்காமம் கிரிவெஹெர புராதன விகாரையின்நாயக்கதேரர்வணக்கத்திற்குரிய கோபவக்க தம்மிந்த தேரரின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டதாக இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பரவும் செய்தி குறித்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிக்கை வெள யிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின்படி, கதிர்காமம் மகா தேவாலய வளாகத்திற்குள் அஷ்டபல போதி மரமும், கதிர்காமம் கிரிவெஹெர மற்றும் ஏனையஆலயங்களும்அமைந்துள்ளதாகவும், இந்த வளாகத்தின் பாதுகாப்பிற்காக 24 மணி நேரமும் 16 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கிரிவெஹெர புராதன விகாரையின்நாயக்கதேரரின்பாதுகாப்புக்காக 2018 ஆம்ஆண்டுமுதல்ஆலயகாவலரணில் இணைக்கப்பட்டுள்ள17 உத்தியோகத்தர்களில் 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் 24 மணி நேரமும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, கதிர்காமம் ஆலய வளாகத்தில் இராணுவப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், அந்தக் இராணுவப் பிரிவினரும் கதிர்காமம் கிரிவெஹெர புராதன விகாரையின் நாயக்க தேரரின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, கதிர்காமம் கிரிவெஹெர புராதன விகாரையின் நாயக்க தேரர் வணக்கத்திற்குரிய கொபவக்க தம்மிக தேரரின் பாதுகாப்பு அல்லது புனித தலத்தின் பாதுகாப்புநீக்கப்பட்டுள்ளதாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் உட்பட சமூக ஊடகங்களில் பரவும் செய்தி பொய்யானது என மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.10.2025இல் வெளியிடப்பெற்றது